2009 பிப்ரவரி 19]

2. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 21 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

தூங்கும் வசதி

***57304—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீண்ட தூரம் பயணம் செய்யும் வழித்தடங்களில் தூங்கும் வசதி உள்ள பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீண்ட தூரப் பயணிகளின் தேவைக்கு ஏற்ப மித சொகுசு, சொகுசு, அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து, குளிர்சாதன வசதியுடன்கூடிய அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து ஆகிய பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. தூங்கும் வசதி உள்ள பேருந்துகளை இயக்க, பயணிகளின் தேவை அதிகரிக்கும்போது பரிசீலிக்கப்படும்.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண்கள் 23 மற்றும் 24 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.